Int. J. Adv. Multidiscip. Res. (2022). 9(3): 139-149

International Journal of Advanced Multidisciplinary Research
ISSN: 2393-8870
www.ijarm.com
(A Peer Reviewed, Referred, Indexed and Open Access Journal)
DOI: 10.22192/ijamr Volume 9, Issue 3 -2022

Review Article

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2022.09.03.012

# Review on Varma Maruthuvam in obstetrics and pediatric age group

V. Gayathri[1], A. S. Sri Ragupathi[2]

[1]PG, Scholar, Kuzhanthai Maruthuvam, Government Siddha Medical College, Chennai-106
[2] Varma consultant, Siddha physician, Balaji eye hospital, Erode.

Keywords

siddha medicine, varmam, literature, obstetrics and pediatrics.

## Abstract

Siddha medicine, traditional system of healing that originated in South India. One of the word which always connect with the siddha system is 'varmam'. The word varmam is a Varma kalai, a branch of siddha system of medicine which involves a special kind of therapy based on vital points called Varma points present in the body. It has attributed to several siddhars namely Agasthiyar, Bogar, Theraiyar. Varma medicine plays a best role in certain disease like hemiplegia and arthritis condition, etc…In pediatric age group it excellently works in the case of cerebral palsy. Eventhough there is a good result in patient but still hesitate to handle the Varma in pediatric age group and also obstetric people. This paper has gives a confidence to improve the Varma on pediatric patients. It is a Review article which data are collected from ancient Varma literature and discussed about some pediatric Varma medicines.

## முன்னுரை

வர்மம் என்ற சொல்லே மர்மம் என்ற சொல்லின் திரிபாக கொள்ளலாம். மர்மம் என்ற சொல் சூட்சம் என்ற வடசொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் ஆகும். சூட்சம் என்ற வடசொல்லையும் வர்ம சூத்திர ஆசிரியர் வர்மம் என்பதின் மாற்றுச் சொல்லாக பயன்படுத்தியுள்ளார். சூட்சமான பகுதி என்பது மர்மமான பகுதி என பொருள்படும்.அதாவது உடலில் மர்மமாக, மறை பொருளாக புதிராக காணப்படும் இடங்கள், அவ்விடங்களை மர்ம வைத்தியர்களும் அவர்களின் கீழிருந்து

இக்கலையை நன்கு கற்றுணர்ந்தவர்களும் மட்டுமே அறிவர்.ஏனையோர் அவ்விடங்களை பற்றியும் அவ்விடங்களில் அடிபட்டால் ஏற்படும் அபாயங்கள் பற்றியும் அறியமுடியாதபடி மர்மமாக உள்ளதால் இதனை மர்மம் என பெயரிட்டு அழைத்தனர். காலப்போக்கில் வர்மம் என திரிபடைந்திருக்கலாம். வர்மம் என்ற சொல்லுக்கு நிகராக காலம், அடக்கம், சூட்சம், வன்மம், ஏமம், என்ற பல சொற்கள் வழங்கப்படுகின்றன.

## உடலில் வர்மம் எப்படி ஏற்படுகின்றன என்பதற்கான வரலாறு

கேளப்பா தடியடி படுவதாலும்

கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்

வாளப்பாகட்டை குற்றி தட்டலாலும்

மாற்றனின் கைப்பிடிகள் கொள்ளலாலும்

கேளப்பா ஆகாசமதிலே நின்று

மெய்யர்ந்து கைமறந்து விழுதலாலும்

தாளப்பாபற் பலவாம் விதத்தினுலே

சங்கையில்லா காலமது சாருந்தானே

உடம்பில் தடி, கோல் போன்றவைகளால் உதைகள் படுவதாலும்,கல் அல்லது மற்றுமுள்ள பொருளால் விசையுடன் எறியப்பட்டு, அவ்விசையின் தாக்கு உடலில் தாவுவதாலும், மேலாக நிலையாக இருக்கும் துலாம் கட்டளை உத்திரம் போன்ற நிலையங்களில் உடம்பு தட்டுப்படுவதாலும்,எதிரிகளின் கைப்பிடியின் ஊக்கம் நம் உடம்பில் படுவதாலும், ஆகாயத்திலிருந்தும், ஓடும் வாகனத்திலிருந்தும், மரங்களிலிருந்தும் இது போன்ற பல விதங்களில் விழுவதாலும், உணர்விழந்தோ, கைமறந்தோ கீழே விழுவதாலும், உடம்பின் மர்ம இடங்களில் வியாபித்துள்ள பல வர்ம இடங்களில் அதனதன் கிரமப்படி வர்மங்கள் ஏற்படுகின்றன. வர்ம கொண்ட இடத்தில் வலி, வீக்கம், காண்பது மட்டுமின்றி பஞ்சபூதங்களும் பாதித்து மனக்கலக்கம் ஏற்பட்டு , உள்ளுணர்வு குன்றிப்போகும்.

## வர்மத்தின் மாத்திரை அளவு

பிழையாமலிளக்கு முறை சொன்னதுக் கெல்லாம்

பேசரிய யாத்திரையின் பிறமாணங்கேளு

தழையாமலிராது விரல் தானோ் சாண்

சரியாக யெடுத்திருத்தல் தட்டல் குத்தல்

கழையாமல் நீ கரமது கொண்டு தாக்கு

கடிந்து விட்டாலதி கடினமாகுமப்பா

உழையாமல் தேகபலன் வயசு காலம்

விளக்கமது கண்டறிந்து உணர்வாய்ச் செய்யே

நோயாளியின் உடம்பில் ஏற்பட்ட வர்மத்திற்கு சிகிச்சை செய்யுங்கால், நோயாளியை தரையிலிருந்து ஒரு அடி அல்லது ஒரு சாண் உயரத்தில் தூக்கி இருத்தல் வேண்டும். நோயாளியின் உடம்பில் மருத்துவர் தட்டல், தடவல், குத்து போன்றவைகள் செய்யும் போது நோயாளியின் தன்மை, தேகபலம், வயது, தாங்கும் சக்தி, இவைகளை நன்கு சிந்தித்து செயலாற்றுதலே பொது விதியாகும்.

செய்யவே யின்ன மொரு விபரங் கேளு

சிறுவர் முதல் விருத்தர் மற்றெள்ளா பேர்க்கும்

உய்யவே அவரவர் கைக்கொண்ட சாண் நீளம்

உடலாகும அங்குலம் பனிரண்டொர் சாணும்

உய்யவே அளவிடை மாத்திரை களெல்லாம்

சூட்சமாய் அவரவர் கைக்கமைந்த வாறும்

பய்யவே கண்டறிந்து தேர்ந்து செய்தால்

பலனுகுமிம் முறையை பகர்ந்திட்டாரே.

சிறியோர் முதல் வயோதிகர் வரைக்கும் அவரவர் கை சாணுக்கு எட்டு அளவ் தான் உடலின் உயரம். மாத்திரையின் அளவை நோயாளியின் கை அளவை நிர்ணயித்து நடந்தால் செய்தொழில் நலமுண்டாகும்.

இவ்வாறு பல நூல்களில் வர்ம முறைகள் பற்றி குறிப்பிட்டு உள்ள போதும் கர்பிணி மற்றும் குழந்தைகளுக்கான வர்ம முறைகள் பற்றி போதிய நூல் குறிப்பேடுகள் கிடைக்கவில்லை.இக்கட்டுரையில் கர்பிணி மற்றும் குழந்தைகளுக்கான சில வர்ம முறைகளும் ,வர்ம மருத்துவமும் தொகுத்து கூறப்பட்டுள்ளது.

## கர்ப்பம்தரித்த பெண்ணுக்கு வர்ம பரிகாரம்

பகரவே கர்ப்ப ஸ்திரிதனருக்குக் கேளு

பகர்ந்த முறை சிறிதறிந்து பார்த்துச் செய்து

நிகரவே முறையொன்று சொல்வேன் கூந்தல்

நேர் நூலாயி வகுந்தனை முடிந்து விட்டு

நுகரவே யுச்சியுடன் வரிகள் நாலும்

உண்மைபெற அகங்கையால் தேய்த்துவிட்டு

தகரவே யுடங் நாலுவசவும் நன்றய்

தடவி உடல் தூக்கிவிட சரம் நேராமே

நீ கீளொருகை அதக்கையாலே புண்ணியனே

பதைபதைத்து முன்பதைப்பு மட்டும்

ஆற்றியே தடவிப்பின் நாபியிலும் அப்பனே

அப்பு சிப்பி அரையின்கீழ் கழுத்து மட்டும்

போற்றியே நால்வசமும் கசக்கிறவி முதுகு

புறமேதான் தடவி அமர்த்தி வைத்து சாற்றி

சார்பாக மேலடங்கல் செய்துகொள்ளே

கொள்ளப்பா இப்படியே செய்துகொண்டு

கோர்வாக மேல் சங்குதிரியில்தானும்

நாளப்பா இருவசமும் திரிச்சுற்றி நாயகமே

தோளிரண்டும் அமர்த்திப்போடு

போடப்பா உச்சியின்மேல் கையை

வைத்து விதமாக மூன்று தட்டு

லேசாய் தட்டி தட்டியே முறைப்படியே

செய்தாயானுல் ஜீவனது வந்துவிடும்

மீண்டுதானே மீளவே சுக்கு வென்னீர்

குடிக்கச் சொல்லே.சொல்லவே மயக்கமென்றுல்

நீந்திப்பார்த்து சுருக்காக கலசத்தில்

தண்ணீர்கொண்டு பரப்பிரம்மத்தை

சிவம் என்று சேவித்து போற்றியே வீசி

காணவே முகத்தெளிப்பாய் மயக்கம் தீரும்.

கர்ப்ப தரித்த பெண்களுக்குரிய வர்ம பரிகாரமாக, சிகிச்சை செய்யும் போது கூந்தலை குறுக்காகவும், நேராகவும் நான்கு பிரிவாக பிரித்து முடிச்சு போடவும். உச்சி வரிகளில் நம் கையால் தேய்த்துவிட்டு, உடம்பின் நாலு வசத்திலும் தடவி தூக்கிவிடவும், உடம்பு செம்மையாகும். இவ்விதியே உத்தமமாகும். மேலும் சுக்கு தூள் வெந்நீருடன் கலந்து கொடுத்து முகத்திலும் நீர் தெளிக்க மயக்கம் தீரும்.

## கர்பிணிக்கான வர்ம கஞ்சி

நலமான கஞ்சிமுறை விளம்பக்கேளு

நாயகமே உளிஞெ குருந்தட்டி வில்லை

வில்லையொடு சீரகமும்மதுரம் ஏலம்

வகையான வெந்தயத் தோடேளுமாகும்

வகையான களஞ்சியொன்று நிறுத்துக்கொண்டு

வண்ணமாய் சமைத்து இருகிளியாய்க்கட்டி

மணமாகத்தான் காச்சி கிளியை நீக்கி

அன்னப்பாலது அருந்தி பத்தியம் காத்து

துகையாக இப்படியே ரெட்டிப்பாக சூட்சமாய்

அருந்திடில் வர்மம் போச்சே ....

கர்பிணிப் பெண்களுக்கு வர்மம் ஏற்படின் தும்பை, முடக்கற்றான், துத்தி, சீரகம், அதிமதுரம், ஏலம், வெந்தயம்

இவற்றை ஒரே அளவாக எடுத்து ஒரு துணியில் முடிந்து அந்த முடிச்சினை நீரில் இட்டு காய்ச்ச வேண்டும். பின் அந்த கிளியை நீக்கி விட்டு கஞ்சியை மட்டும் குடிக்க வர்ம பிடிப்புகள் நீங்கும்.

## நரம்பு தெற்றல் (நரம்பு பினைப்பு)

போகவே கொழுத்து நரம்பு தெற்றல் கண்டால்

ஆவின்நெய் சீனி சிங்கன்பழம் ஓரிலையுமாகும்

சமமாக எடுத்துக்கொண்டு நிச்சமாய் குழியம்மிதன்னில்

வைத்து வெந்நீரால் மைபோலாட்டி

வண்மையாய் கெர்பிணியின் வயர் விலாக்கள்

வன்னிசாய் முதுகு மற்றும் இடத்தில் பூசே

எண்ணமாய் கொளுத்தோடு நரம்புதெற்று

உளைச்சல்களும் ஓடிப்போகும்.

நரம்பு பினைப்புகளால் ஏற்படும் வலி நீங்க நெய், சர்க்கரை, வாழைப்பழம் (சிங்கன் பழம்), ஓரிலை தாமரை இவற்றை சமஅளவு எடுத்து வெந்நீர் விட்டு அரைத்து கர்பிணிகளின் வயிறு, விலாப்பகுதி, முதுகு, ஆகிய இடங்களில் பற்றாக தடவ உளைச்சல்கள் நீங்கும்.

## குழந்தைகளுக்கு வர்ம பரிகாரம்

நேராக சொல்லுகிறேனின்ன மொன்று

நீனிலத்திலூறுகின்ற பருவம் தன்னில்

சீராக யேந்து கைக் குழந்தையான

சிறுவருக்கு யொருமுறைதான் செப்பக்கேளு

வேறுகமறு தளங்களறிந்து சற்றே

விரல் கொண்டங்கூணி உச்சி மீது கையால்

மோராக தேயித்து கையால் நெஞ்சு

முதுகெல்லாந் தடவிவிட மூச்சுண்டாமே.

கையில் தூக்கிச் செல்லும் கைக்குழந்தைக்கு ஏற்பட்ட வர்மத்தை சிகிச்சை செய்ய,வர்மம் பட்ட இடத்திற்கு மாற்று இடங்களைக் கண்டு கவனமாய் இளக்கல் வேண்டும். உச்சந்தலையில் கையால் தேய்த்தும், நெஞ்சு, கை, கால்கள், முதுகு பக்கம் இவைகளை தடவியும் விட சுகம் ஏற்படும்.

## ஊர்ந்து செல்லுகின்ற குழந்தைகளுக்கு சிறு குழந்தைகளுக்கு வர்மம் ஏற்பட்டு மயக்கம் வந்தால்,

உயிருண்டாக பின்னுமொன்று சொல்லக்கேளு

ஊருகின்ற ஏந்துசிறு குழந்தைக்கப்பா

பயிராக மறுதலத்தை அறிந்து பின்னும்

பாகமாய் விரல் கொண்டு ஊன்றி உச்சி

துயராக தேய்த்து விரல் கைகால் நெஞ்சில்
  தோள்முதுகு பள்ளையடி உள்ளங்கைகால்
அயராமல் தடவி உள்ளே காயராஜாங்கம்
  அகம் கொடுத்து பூசிடவே இளகும் பாரே.
இளகாமல் சன்னியோடு சீதமானால்
  இதமான வெள்ளுள்ளி தைலம் வாங்கி
தெளிவாக பருத்திச்சாறு சாயராஜாங்கம்
  சேரவே மூன்றுமொன்றாய் உள்ளுக்கீந்து
வெளியான குறிதலங்கள் மேலும் பூசி
  விட்டு அடை காதுக்குள் நாசிக்கேற்றி
உடன்பிடிக்க சன்னியகன் றெழும்புவானே.

சிறு குழந்தைகளுக்கு வர்மம் ஏற்றால், மறுதலம் அறிந்து முன்னும் பின்னும் விரல் கொண்டூன்றி, உச்சியை கையால் தேய்த்து, விரல், கை, கால், நெஞ்சு, தோல், முதுகு, பள்ளை, உள்ளங்கை இவற்றில் தொடர்ந்து தடவி விட வேண்டும். காயராஜாங்க தைலம் உள்ளுக்கு கொடுத்து வெளியிலும் பூசிட வர்ம இளகும்.

வர்மம் இளகாமல் சன்னியோடு சீதம் வந்தால் வெள்ளுள்ளி தைலம், வேலிபருத்திச் சாறு, காயராஜாங்கம் இவை மூன்றையும் ஒன்றாக்கி உள்ளுக்கு கொடுத்து, வெளியே பொறி தளங்களிலும் பூசிவிட வேண்டும். மேலும் இதை காதுக்களுக்கும், நாசிக்குள்ளும் சில துளிகள் விட்டு, காலின் கவளியின் மேல் பிடிக்க சன்னி அகன்றிடும்.

## பெற்ற தாயின் கை தவறி விழுந்த பச்சிளங் குழந்தை மயங்கினால்,

இளக்குவது தாயாரை முன்னேயானால்
ஏங்கிடுவானால் அதனாலே இளக்க வேண்டாம்
பக்தியுள்ள சீடனொருவன் அருகில் வேணும்
விளக்கமுள்ள சீடனிடம் சிசுவை ஏந்த
வினவியே அவனருளை தியானம் செய்து
தளக்கமுடன் வெட்டவெளி லாடத்துள்ளே
தானேறி குழல் தன்னை எடுத்துக்கொள்ளே
எடுத்துவந்து குண்டெலி முக்கோணில் வெள்ளம்
ஏறிநிற்கும் அடுத்திரை மோதல் காற்று
அடுத்துரண்டின் மத்தி சிறு வட்டத்துள்ளே
அக்கினியும் காணுமெடா அமத்தியூது

கொடுப்பின் மண்ணின் ஒலிநடுவே சத்தம்கண்டும்
தொடுத்தூது சுழியுந்தி யதிலுமூது
கடுத்ததொரு மண்ணதனில் மண்ணைத் தொட்டு
கருவலமாய் சுற்றி நடு அமத்தியூதே
ஊதையிலே பிறைசுற்றி பதினேழுற்று
உடனே முண்டி பிழைக்குமா சீவாத் மாவும்
பாதையிலே சென்று கடிகாரமத்தி
பன்னிரெண்டு தாவவிசை யாகவூது
போதையிலே எட்டும் உள்ளே பதியும் போது
பொடுபொடென கண்விழிக்கும் செவியில் மூக்கில்
பேதமில்லாதூத அழுதிடுமே பிள்ளை
பெற்றவளை இளக்குவதற்கு பேசுவோமே

கைதவறி விழுந்த மயங்கிப்போன குழந்தையை சீடன் ஒருவன் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தைக்கு உறவினர்கள் எவரும் அருகில் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.குழந்தையின் வெட்டவெளி என்ற லாடத்தில் குழல் கொண்டு ஊத வேண்டும்.அடுத்து குண்டெலியின் முக்கோணில் ஊத வேண்டும். பின்பு வெள்ளம் என்ற அப்பு இடத்தில் ஊத வேண்டும்.அடுத்து காற்று என்ற வாயுவின் இடத்தில் ஊத வேண்டும். பின்பு அப்புக்குள் இருக்கும் அக்கினி என்ற

தேயு இடத்தில் அமர்த்தி ஊத வேண்டும்.பின்பு மண் என்ற பிருத்வியின் நடுவில் தொடர்ந்து ஊத வேண்டும். பின் உந்தியில் உள்ள சுழியில் ஊத வேண்டும். மண்ணின் இடத்திலும், அதை சுற்றியுள்ள இடங்களிலும், நடுவிலும் அமர்த்தி ஊத வேண்டும். பிறை இருக்கும் இடத்தைச் சுற்றிலும் பதினேழு முறை ஊத வேண்டும்.

இவ்வாறு ஊதும் போது மயக்கம் நீங்கி சீவன் உண்டாகும்.அப்போது கெடிகார மத்தியில் பன்னிரெண்டு முறை விசையுடன் ஊத வேண்டும். எட்டுமுள்ளே பதியும் போது பொடுபொடுவென கண் விழிக்கும். தொடர்ந்து செவியிலும் மூக்கிலும் ஊதிட பிள்ளை அழ ஆரம்பிக்கும்.

## குழந்தைக்கு ஏற்படும் வலிப்பிற்கு அழுத்த வேண்டிய இடம்

காதின் கீழ் தொங்கும் பகுதியின் மையப்பகுதியை அழுத்திப் பிடிக்க வலிப்பு நின்று விடும்.

## முடிவுரை

சித்த மருத்துவமானது வர்ம மருத்துவம் இன்றி முழுமையடையாது என்ற உண்மை அனைவரும் அறிந்ததே. ஆனாலும் தவறான வழியில் யாருக்காவது ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தினாலே வர்ம ஆசான்களால் வர்ம மருத்துவம் மறை பொருளாக இருந்து வருகிறது.இந்நிலையை மாற்றுவதற்கு மருத்துவ மாணவர்கள் முயல வேண்டும். வர்ம முறைகளை கற்றுக் கொள்ளவும், அதனை கடைபிடிக்கவும் நமது சித்தர்கள் கூறிய நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும். இன்றைய மரபணு மாற்றத்தால் நோய்கள் ஏற்படும் கால கட்டத்தில் வர்ம மருத்துவத்தில் கர்ப்பிணி மற்றும் குழந்தைகளுக்காக சொல்லப்பட்ட மருத்துவ முறைகள் மிகுந்த பயனளிக்கும்.இதனை முறைப்படி வர்ம ஆசிரியரிடம் பயிற்சி பெற்ற பின், பின்பற்றி நோயாளிக்கு பயன் அளிக்கலாம்.

## References

1. R.Thiyagarajan, Siddha Maruthuvamsirappu, Indian Medicine and Homeopathy-chennai, 1995, pg.no:129.
2. T.kannan rajaram, Varma Maruthuvam (pothu), ATSVS, pg.no : 246
3. Varma odivumurivu Sara soothiram-1200.
4. Varma beerangi
5. Naluvagaimathirai – 100.
6. S. Sugunthan, R. Shailaja, M. Mohamed Musthafa, A Review of fundamental principles of varmam – An ancient siddha medical science, Int J Ayu Pharm Chem,2016 vol 4, issue 3.
7. S. Chithamparathanu Pillai, Varma sootcham, siddha magudapiragaram, 1976, pg.no: 7
8. Jeyasayabhakkiyanathan Nadaar, Varma vaithiya magudam, Japakinibhakkiyanathan Nadaar, 1938, pg.no: 194.

| Access this Article in Online | |
|---|---|
| | Website: www.ijarm.com |
| Quick Response Code | Subject: Siddha Medicine. |
| DOI:10.22192/ijamr.2022.09.03.012 | |

How to cite this article:
V. Gayathri, A. S. Sri Ragupathi. (2022). Review on Varma Maruthuvam in obstetrics and pediatric age group. Int. J. Adv. Multidiscip. Res. 9(3): 139-149.
DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2022.09.03.012